**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., LLM.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.58/2020**

(TNTM03000819/2019)

B. நீலகண்டன் ... வாதி

... எதிர் ...

1. P.பூபதி
2. D.சுமதி
3. B.ஏகவள்ளி
4. P.இளங்கோ
5. M.தட்சணாமூர்த்தி
6. கிளை மேலாளர், ஆக்ஸிஸ் வங்கி, ஆரணி. ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக 27.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன்,B.Com.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ரமேஷ்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பரசுராமன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், 6ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ரமேஷ்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும், இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் 6ம் பிரதிவாதிக்கு எதிராக 10.11.2021 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

வழக்கு சொத்துக்களில் வாதிக்கு 1/4 பாகம் உரிமை உள்ளது என முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், இவ்வழக்கின் முதல்நிலை தீர்ப்பாணைப்படி வாதிக்குரிய பாகத்தை ஆணையர்/வழக்கறிஞரை நியமித்து நளஇளப்பம் பார்த்து ஒதுக்கீடு செய்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்தும், வழக்கு செலவுத்தொகை வேண்டியும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வழக்குரையின் சுருக்கம்:-**

வாதியும், 2, 3 பிரதிவாதிகளும், 1ம் பிரதிவாதியின் மகன், மகள்கள் ஆவார். 5ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் கணவர் ஆவார். வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏகோபித்து கூட்டு குடும்பமாக இருந்த காலத்தில் வழக்கு சொத்துக்களை 14.05.2003 அன்று ஆதிமுலம் என்பவரிடமிருந்து 1ம் பிரதிவாதி விலைக்கு வாங்கினார். மேற்படி 14.05.2003 தேதியிட்ட கிரையப் பத்திரம் ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் 3535/2003 என்ற எண்ணாக பதிவாகி உள்ளது. வழக்குச் சொத்துக்களை கிரையம் பெறும் போது அவற்றின் உரிமையாளராக இருந்த ஆதிமூலம் கிணறு வெட்டி பாதியில் நிறுத்தி வைத்து இருந்ததை வாதியும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டு குடும்பமாக இருந்த காலத்தில் பூர்வீக சொத்தை 12.07.2006 அன்று விற்று அவற்றில் வந்த பணத்தைக் கொண்டு பாதியில் இருந்த கிணற்றை முழுவதுமான வெட்டி தண்ணீர் பாய்ச்சும் அளவிற்கு தரமான கிணறு வெட்டி பம்புசெட் அமைத்து மின்இணைப்பு வாங்கி கூட்டு குடும்பமாக பயிர் செய்து வந்தார்கள். மூதாதையோர் சம்பாதித்த கூட்டு குடும்ப சொத்துக்களை விற்கும் போது அந்த கிரைய பத்திரத்தில் வாதி கூட்டு குடும்ப சொத்தின் பங்குதாரர் என்ற முறையில் சாட்சி கையெழுத்து செய்துள்ளார். அதன்பின் வழக்குச் சொத்துக்களை வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டு குடும்பமாக அனுபவித்து வந்தார்கள். கூட்டு குடும்பதாரர் என்ற முறையில் வாதிக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தலா 1/4 பங்கு உரிமை உடையதாகும். வழக்குச் சொத்துக்களில் கூட்டு குடும்பமாக அனுபவித்து வந்தபோது சுமார் 12 வருடங்களுக்கு முன்பு வாதி ஒரு பெண்ணை காதலித்து திருமணம் செய்துக் கொண்டு சென்னையில் குடியேறி விட்டார். வாதி காதலித்து திருமணம் செய்துக் கொண்டது அவர் குடும்பத்தாருக்கு பிடிக்கவில்லை. வாதி வீட்டை விட்டு வெளியே சென்ற போது கூட்டு குடும்பத்தில் அவர் வைத்திருந்த 100 ஆடுகள் மற்றும் 25 சவரன் தங்க நகைகளை கூட்டாக வைத்துவிட்டு சென்றார். தற்போது வரை 1 முதல் 3 பிரதிவாதிகள், வாதியை தன்னுடைய குடும்பத்தில் சேர்த்துக்கொள்ளவில்லை. வாதி காதலித்து திருமணம் செய்துக் கொண்டதால் அவர் மீது விரோதம் பாராட்டி கொண்டு வருகின்றார்கள். வாதிக்கு இரண்டு குழந்தைகள் பிறந்துள்ளது. அதையும் உறவு முறைகளை பாராட்டாமல் வீண் விரோதம் செய்து கொண்டு வருகிறார்கள். இதுமிகவும் வருத்தத்திற்க்குறியதாகும். வாதி தற்போது வழக்குச் சொத்துக்கள் உள்ள ஊரில் மாமனார் வீட்டில் தங்கி அங்கேயே வேலை செய்துக் கொண்டு வருகிறார். சிலசமயம் சென்னைக்கு சென்று கொத்தனார் வேலையும் செய்து வாரத்திற்கு ஒருமுறை வந்து செல்வார்.

2. அதாவது வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் மூதாதையோர் சொத்தை விற்று அவற்றில் வந்த வருமானத் வைத்துக் கொண்டு வாங்கப்பட்ட கூட்டு குடும்பச் சொத்துக்களாகும். இந்நிலையில், வாதிக்கு தெரியாமல் வழக்குச் சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்பதை மறைத்து 02.03.2007 அன்று 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு வழக்குச் சொத்துக்களை விற்பனை ஆவணத்தின் வாயிலாக விற்று விட்டார். மேற்படி 02.03.2007 தேதியிட்ட கிரையப் பத்திரம் ஆரணி சார் பதிவாளர் அலுவலகத்தில் 1447/2007 என்ற எண்ணாக பதிவாகி உள்ளது. வழக்குச் சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்ற முறையில் வாதிக்கு 1/4 பங்கு உரிமையானதாகும். அவற்றை 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றது சட்டப்படி செல்லாத ஒன்றாகும். அதன்பின் வழக்குச் சொத்துக்களை 28.11.2007 அன்று 4ம் பிரதிவாதியிடமிருந்து 5ம் பிரதிவாதி கிரைய ஆவணத்தின் வாயிலாக கிரையம் பெற்றுள்ளார். அது சட்டப்படி செல்லாத ஒன்றாகும். மேற்படி 28.11.2007 தேதியிட்ட கிரையப் பத்திரம் ஆரணி, சார் பதிவாளர் அலுவலகத்தில் 9232/2007 என்ற எண்ணாக பதிவாகி உள்ளது. அதன்பின் 5ம் பிரதிவாதி வழக்குச் சொத்துக்களை 01.09.2014 அன்று 6ம் பிரதிவாதியான ஆக்ஸிஸ் வங்கிக்கு விவசாய கடனுக்காக அடமானம் வைத்துள்ளார். மேற்படி அடமான பத்திரமானது ஆரணி சார் பதிவாளர் அலுவலகத்தில் 6624/2014 என்ற எண்ணாக பதிவாகி உள்ளது. அது சட்டப்படி செல்லாத ஒன்றாகும். வாதி வீட்டை விட்டு வெளியே செல்லும்போது வழக்குச் சொத்துக்களை கூட்டாகத்தான் விட்டுச் சென்றார். எந்த சொத்துக்களும் விற்கப்படவில்லை. அதன்பின் தான் வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் பாராதீனம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகளின் செயல் வாதிக்குண்டான பாகத்தை ஏமாற்றும் விதமாக மோசடியாக செய்யப்பட்டுள்ளதை அறிந்த வாதி தன்னுடைய வழக்கறிஞர் வாயிலாக 01.11.2019 அன்று தனக்குண்டான 1/4 பங்கு பாகத்தை பிரித்து தரக்கோரி பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு ஒன்றை அனுப்பினார். வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிரதிவாதிகள் பொய்யான சங்கதிகளை கூறி பதில் அறிவிப்பு அனுப்பினார்கள். இதிலிருந்து வாதிக்குண்டான பாகத்தை பிரதிவாதிகள் பிரித்துக் கொடுக்க மாட்டார்கள் என்பது தெளிவாகிறது. எனவே வாதி வழக்குச் சொத்துக்களில் தனக்குரிய 1/4 பங்கை பிரித்துத் தனிப்பட்ட ஆளுகையை அவர் வசம் கொடுக்கக் கோரி இவ்வழக்கை தொடர்ந்துள்ளார்.

**3. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்து 2 மற்றும் 3 பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்ட எதிர்வழக்குரை சுருக்கம்:**

தாவா சொத்துக்கள் சம்மந்தமாக வாதி 1/4 பாகம் உரிமை உள்ளது என முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், அதன் முன்னிலைக்கு இறுதி நிலை தீர்ப்பாணை வழங்கவும் தாக்கல் செய்திருக்கும் மேற்படி தாவா சட்டப்படியும்.

நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த எதிர்வழக்குரையில் இந்த பிரதிவாதி தாமாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளையும் வாதியே நீரூபிக்க கடமைபட்டவர். தாவா பாரா 3ல் வாதி சொல்லியுள்ள உறவுமுறைகள் மட்டும் உண்மை. மற்ற சங்கதிகள் யாவும் உண்மையல்ல. தாவா பாரா 4ல் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏகோபித்து கூட்டு குடும்பமாக இருந்தபோது ஆதிமூலம் என்பவரிடம் 14.05.2003ல் தாவா சொத்துக்களை இப்பிரதிவாதி விலைக்கு வாங்கினார் என்றும், தாவா பாரா 5ல் தாவா சொத்துக்களை கிரையம் பெறும்போது, கிரையம் கொடுத்தவர் உரிமையாளராக இருந்தபோது கிணறு வெட்டி பாதியில் நிறுத்தி வைத்திருந்ததாகவும், கூட்டாக இருந்தபோது 12.07.2006ல் பூர்விக சொத்தை விற்று அதன் மூலம் வந்த வருவாயை கொண்டு, பாதியில் இருந்த கிணற்றை முழுவதுமாக வெட்டி தண்ணீர் பாய்ச்சும் அளவிற்கு பம்புசெட் அமைத்து மின் இணைப்பு பெற்று கூட்டாக பயிர் செய்து அனுபவித்து வந்ததாகவும், மேற்படி கிரைய ஆவணத்தில் வாதி சாட்சி கையெழுத்து செய்துள்ளதாகவும், 12 வருடங்களுக்கு முன் வாதி ஒரு பெண்ணை காதலித்து சென்னையில் குடியேறிவிட்டதாகவும், அப்போது குடும்பத்தில் இருந்த 100 ஆடுகள், 25 சவரன் தங்க நகைகளை கூட்டாக வைத்து சென்றதாகவும், காதல் திருமணம் செய்துகொண்டதால் வாதியை, பிரதிவாதிகள் குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை என்றும், அதனால் வாதி அவரது மாமனார் வீட்டிலேயே தங்கி வசித்து வருவதாகவும், வழக்கு சொத்துக்கள் முழுவதும் மூதாதையர் சொத்துக்களை விற்று அதன் மூலம் வந்த வருவாயைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றும், அதனை வாதிக்கு தெரியாமல் இப்பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு 02.03.2007ல் விற்றுவிட்டதாகவும், அதன் முன்னிலைக்கு பிரதிவாதியிடம் 5ம் பிரதிவாதி 28.11.2007ல் கிரையம் பெற்று 6ம் பிரதிவாதியிடம் அடமானக்கடன் பெற்றுள்ளதாகவும், அதனால் பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி மேற்படி வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் உண்மையல்ல. மேற்கண்ட தாவா சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைபட்டவர்.

4. உண்மையில் தாவா சொத்துக்களை இப்பிரதிவாதி அவரது தனிப்பட்ட வருவாயைக் கொண்டு 14.05.2003ல் ஆதிமூலம் என்பவரிடம் கிரையம் பெற்றார். இப்பிரதிவாதி ஆடுகளை மேய்த்து வியாபாரம் செய்துகொண்டும், ஊரில் உள்ள மற்றவர் நிலங்களில் ஏர் உழுதும், மாட்டு வண்டி ஓட்டியும் தனிப்பட்ட முறையில் சம்பாதித்து சேமித்து வைத்திருந்தார். அந்த வருவாயைக் கொண்டுதான் தாவா சொத்துக்களை வாதி தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்றார். அதில் வாதிக்கோ அல்லது வேறு யாருக்கோ எந்தவித உரிமையும் கிடையாது. இப்பிரதிவாதி கிரையம் பெறுவதற்கு முன்பாகவே தாவா சொத்துக்களின் உரிமையாளராக இருந்த ஆதிமூலம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்ட ஜீவன்தாரா திட்டம் மூலம் கிணறு வெட்டி, பம்புசெட்

அமைத்து மின் இணைப்பை வாங்கி அனுபவித்து வந்தார். அதன்பிறகு இப்பிரதிவாதி அவர் பெயரில் கிரையம் பெற்று தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தார். மேற்கண்ட சங்கதிகள் வாதிக்கு ஏற்கனவே தெரியும். அதனை மறைத்து, பூர்வீக சொத்துக்களை விற்று அதன் மூலம் வந்த வருவாயைக் கொண்டு கிணறு வெட்டி, மின் இணைப்பு பெற்று கூட்டாக அனுபவித்து வந்ததாக வாதி சொல்லியிருப்பது ஏற்புடையதல்ல. அவை யாவும் வழக்கிற்க்காக சொல்லப்பட்ட பொய்யான கற்பனை கதைகளாகும். அதில் எந்தவித உண்மையான நேர்மையான காரணமும் இல்லை இந்த காரணத்திற்காகவே வாதியின் தாவாவை தள்ளுபடி செய்யவேண்டும்.

5. தாவாவில் வாதியானவர் 12.07.2006ல் விற்பனை செய்ததாக சொல்லப்பட்ட சொத்துக்கள் இப்பிரதிவாதிக்கும் அவருடைய சகோதர சகோதரிகளுக்கும் பாத்தியபட்ட மூதாதையர் சொத்துக்களாகும். இப்பிரதிவாதியின் தகப்பனார் பொன்னுசாமி என்பவர் சுமார் 60 வருடங்களுக்கு முன்பாகவே இறந்துவிட்டார். அதனால் 1975ம் வருடம் ஏப்ரல் மாதம் ஊரில் ஏற்பாடு செய்யப்பட்ட பஞ்சாயத்தில் இப்பிரதிவாதியும் அவருடைய சகோதரர்களும் வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டனர். பாகம் ஏற்பட்ட வகையில் அவரவர்களுக்கு வந்த சொத்துக்களை தனிப்பட்ட முறையில் பட்டா மாற்றம் செய்துக்கொண்டு தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தனர். அப்போது வாதி பிறக்கவே இல்லை. வாதி அதில் உரிமை கோரவும் முடியாது. அதனால் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் இப்பிரதிவாதிக்கு பாத்தியபட்ட தனி சொத்தாகும். அதனை அவர் பெயரில் பட்டா மாற்றம் செய்து அனுபவித்து வந்து அவரது குடும்ப தேவைக்காக விற்பனை செய்தார். அதில் வாதிக்கு எந்தவித உரிமையும் இல்லாததால் சாட்சிக்காக மட்டும் கையெழுத்து செய்துள்ளார். அப்படி உரிமையோ பாத்தியமோ ஏதேனும் இருந்திருந்தால் இப்பிரதிவாதியுடன் சேர்ந்து கிரையம் செய்திருப்பார். மேற்கண்ட விவரம் வாதிக்கு தெளிவாக தெரியும். தெரிந்தே இப்பிரதிவாதிகளை அலைகழிக்க பொய்யான தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

6. வாதியானவர் குடும்பத்தில் எந்தவித பொறுப்பும் இல்லாமல், வேலைக்கு செல்லாமல் ஊதாரியாக வாழ்ந்து வந்தார். சிறுவயதாக இருக்கும்போதே ஒரு பெண்ணை குடும்பத்திற்கு தெரியாமல் காதலித்து வந்துள்ளார். இப்பிரதிவாதியின் மகளான 3ம் பிரதிவாதி ஏகவள்ளி திருமணத்திற்காக இப்பிரதிவாதி அவரது உழைப்பின் மூலம் 25 சவரன் தங்க நகைகளை எடுத்து வைத்திருந்தார். அதனை வீட்டிலிருந்து வாதி திருடி எடுத்துக்கொண்டு அவர் காதலித்து வந்த பெண்ணுடன் ஊரைவிட்டு ஓடிவிட்டார். இதனால் இப்பிரதிவாதியின் மகளான ஏகவள்ளி என்பவருக்கு திருமணம் தடைபட்டு, இன்று வரை திருமணம் ஆகாமல் இருந்து வருகிறார். வாதியானவர் இப்பிரதிவாதிக்கு சொந்த மகன் என்பதால் இதுகுறித்து காவல் நிலையத்தில் எந்தவித புகாரும் கொடுக்கவில்லை. அதை சாதகமாக்கிக்கொண்டு கூட்டாக நகைகளை

வைத்துவிட்டு சென்றுவிட்டதாக தாவாவில் தெரிவித்துள்ளார். இப்பிரதிவாதி சொந்தமாக ஆடுகளை வைத்து வியாபாரம் செய்து வந்தார். அந்த சந்தர்பத்திலும் வாதியானவர் ஆடுகளை திருடி விற்றுவந்தார். இதுபோன்று பல வழிகளில் வாதியானவர் இப்பிரதிவாதிக்கு தொல்லைகள் ஏற்படுத்தி வந்தார். தாவா சொத்துக்களானது இப்பிரதிவாதிக்கு பாத்தியபட்ட தனிசொத்து என்பதால் 4ம் பிரதிவாதிக்கு 02.03.2007ல் சரியான பிரதிபலனுக்கு தகுந்த சாட்சிகள் முன்னிலையில் கிரையம் செய்து கொடுத்துவிட்டார். மேற்படி கிரையம் ஏற்பட்டது வாதிக்கு அப்போதே நன்கு தெரியும். அதனை மறைத்து வாதியானவர் பிரதிவாதிகளுக்கு காலம் கடந்து வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு அனுப்பியிருந்தார். அதற்கு இப்பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலம் தெளிவான பதிலுரையை அனுப்பியிருந்தனர்.

7. மேற்கண்ட உண்மை சங்கதிகளை மறைத்து வாதி பல பொய்யான சங்கதிகளை கூறி இப்பிரதிவாதிகள் மீது மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதிக்கு தாவா சொத்துக்கள் சம்மந்தமாக சட்டப்படி எந்தவித அடிப்படை உரிமையோ, பாத்தியமோ இல்லாமல் இப்பிரதிவாதி மீது தவறான அடிப்படையில் தாவாவை தாக்கல் செய்துள்ளார். அதனால் மேற்படி தாவா சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. வழக்கிற்கு வாதி கூறிய காரண காரியங்கள் அனைத்தும் தவறானவை. வாதிக்கு சட்டப்படி எந்த பரிகாரமும் கிடைக்க வாய்ப்பு இல்லை. பிரதிவாதிகளை அலைகழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதியால் இந்த தாவா தொடரப்பட்டுள்ளது. தனிப்பட்ட விரோதத்தின் அடிப்படையில் இந்த தாவா தாக்கல் செய்துள்ளதாலும், நீதிமன்ற நேரத்தை வீணாக்கியதாலும் உடனடியாக இந்த தாவாவை தள்ளுபடி செய்ய வேணுமாய் இப்பிரதிவாதி கேட்டுகொள்கிறார். எனவே கனம் கோர்ட்டார் அவர்கள் சி.பி.சி. பிரிவு 35எ படி இப்பிரதிவாதிக்கு ரூ.10,000/- நஷ்ட ஈட்டு தொகை வழங்கி, வாதியின் தாவாவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்திரவிட இப்பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**<u>8. 5ம் பிரதிவாதி தாக்கல் செய்து 4 பிரதிவாதி ஏற்றுக்கொண்ட எதிர்வழக்குரை சுருக்கம்:</u>**

தாவா சொத்துக்கள் சம்மந்தமாக வாதி தாக்கல் செய்திருக்கும் மேற்படி பாக தாவா சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த எதிர்வழக்குரையில் இந்த பிரதிவாதி தாமாக முன்வந்து ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர ஏனைய அனைத்து சங்கதிகளையும் வாதியே நிரூபிக்க கடமைபட்டவர். தாவாவில் வாதி சொல்லியுள்ள உறவுமுறைகள் மட்டுமே உண்மை மற்ற சங்கதிகள் யாவும் உண்மையல்ல. மேற்கண்ட தாவா சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைபட்டவர். உண்மையில் தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி அவரது தனிப்பட்ட வருவாயைக் கொண்டு 14.05.2003ல் ஆதிமூலம் என்பவரிடம்

கிரையம் பெற்றார். கிரையம் பெற்ற நாள் முதல் அவர் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்து அவருடைய குடும்ப செலவிற்காகவும், சில கடன்களை பைசல் செய்யவும் சரியான பிரதிபலனுக்கு 4ம் பிரதிவாதிக்கு 02.03.2007ல் கிரையம் செய்து கொடுத்துவிட்டார். அதன்பிறகு 4ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் தாவா சொத்துக்களை அடைத்து அனுபவித்து வந்தார். பிறகு 4ம் பிரதிவாதியிடம் இப்பிரதிவாதி சரியான பிரதிபலனுக்கு 28.11.2007ல் கிரையம் பெற்று பட்டா மாற்றம் செய்துகொண்டு தனிப்பட்ட முறையில் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வருகிறார். பிறகு அவரின் தேவைக்காக 6ம் பிரதிவாதியிடம் தாவா சொத்துக்களை அடமானம் வைத்து கடன் பெற்று முறையாக தவணைகளை செலுத்தி வருகிறார். மேற்கண்ட அனைத்து சங்கதிகளும் வாதிக்கு நன்கு தெரியும், தெரிந்தே இப்பிரதிவாதி மீது காழ்ப்புணர்சிக் கொண்டு மேற்படி தாவாவை தாக்கல் செய்துள்ளார்.

9. 1ம் பிரதிவாதி மிகவும் வயதானவர். அவரை இப்பிரதிவாதிதான் அரவணைத்து இன்று வரை பாதுகாத்து சவரட்சணை செய்து வருகிறார். 1ம் பிரதிவாதியின் மகளான 2ம் பிரதிவாதி சுமதி என்பவரை இப்பிரதிவாதி திருமணம் செய்துகொண்டு தன் குடும்பமாக பாவித்து வருகிறார். ஆனால் வாதி சுய நலத்துடன் பெற்றோர்களை கவனிக்காமல் இருந்து வருகிறார். அதே சமயத்தில் உரிமை இல்லாத சொத்தில் பாகம் கேட்டும் மேற்படி பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் வாதி உடல் நிலை பாதிக்கப்பட்டு சென்னை திருவல்லிக்கேனி தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து ரூ.90,000/- வரை செலவு செய்த தொகைகளை இன்று வரை வாதி இப்பிரதிவாதியிடம் திருப்பி தரவில்லை. வாதியின் தாயாருக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டு இரண்டுமுறை அறுவை சிகிச்சை செயப்பட்டது. அதற்கான மருத்துவ செலவுகளையும் இப்பிரதிவாதிதான் பார்த்து வந்தார். வயதான தாய் தந்தையரை கவனிக்காமலும் உடன் பிறந்த சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைக்காமலும், குடும்பத்திற்காக எந்த ஒரு நல்ல செயலையும் செய்யாமல் வாழ்ந்து வருகிறார். வாதியின் செய்கையால் அவருடைய சகோதரிக்கு திருமணம் ஆகாமல் இருந்து வருகிறார். மேலும் உரிமை இல்லாத சொத்திற்கு வழக்கும் தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலைக்கதக்கதல்ல, தாவா சொத்துக்கள் இப்பிரதிவாதிக்கு பாத்தியபட்ட தனி சொத்தாகும். அதில் பாகம் கோர வாதிக்கு எந்தவித உரிமையும் கிடையாது.

10. வாதிக்கு தாவா சொத்துக்கள் சம்மந்தமாக சட்டப்படி எந்தவித உரிமையோ, பாத்தியமோ இல்லை. அதனால் வாதி தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி நிலைக்கதக்கதல்ல. வழக்கிற்கு வாதி கூறிய வழக்கு மூலங்கள் அனைத்தும் தவறானவை. வாதிக்கு தாவாவில் கேட்டுள்ள எந்த பரிகாரமும் சட்டப்படி கிடைக்க வாய்ப்பு இல்லை. பிரதிவாதிகளை அலைகழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதியால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் இந்த தாவாவை தள்ளுபடி

செய்ய வேணுமாய் இப்பிரதிவாதிகள் கேட்டுகொள்கிறார். எனவே சி.பி.சி. பிரிவு 35எ படி இப்பிரதிவாதிகளுக்கு ரூ.5,000/-ம் நஷ்ட ஈட்டு தொகை வழங்கி, வாதியின் தாவாவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள்.

11. <u>வாதி தரப்பு எழுத்து மூலமான வாதுரையின் சுருக்கம்:</u>

வாதி, 1ம் பிரதிவாதியின் மகன், 2, 3 பிரதிவாதிகள், வாதியின் உடன் பிறந்த சகோதரிகள். தாவா சொத்துக்கள் வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் கூட்டு குடும்ப சொத்தாகும். வா.சா.ஆ.1ன் மூலம் 1ம் பிரதிவாதி பெயரில் கூட்டு குடும்ப சொத்தாக கிரையம் வாங்கப்பட்டது. 1ம் பிரதிவாதியின் பூர்வீக சொத்தை விற்பனை செய்து, அதில் வந்த பணத்தைக் கொண்டு தான் தாவா சொத்தில் கிணறு முழுவதுமாக வெட்டி பம்பு செட் அமைத்து மின் இணைப்பு வாங்கி கூட்டு குடும்பமாக பயிர் செய்து வந்தார்கள். பூர்வீக சொத்தை வா.சா.ஆ.2 மூலம் விற்பனை செய்தபோது வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள். கூட்டு குடும்ப சொத்து என்ற அடிப்படையில், வாதிக்கும் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் தலா 1/4 பாகம் உரிமை உடையதாகும். வாதி ஒரு பெண்ணை விரும்பி திருமணம் செய்து கொண்டு சென்னையில் குடியேறினார். அவர் 100 ஆடுகளையும் மற்றும் 25 சவரன் தங்க நகைகளையும் கூட்டு குடும்பத்தில் வைத்து விட்டு சென்றார். வாதிக்கு தாவா சொத்தில் 1/4 பாகம் உள்ள நிலையில், 1ம் பிரதிவாதி, வாதியின் பாகத்தையும் சேர்த்து 4ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3ன் மூலம் விற்பனை செய்து விட்டார். 4ம் பிரதிவாதி வா.சா.ஆ.5ன் மூலம் வா.சா.ஆ.4ன் மூலம் 5ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார். 5ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதியின் மருமகன் ஆவார். வாதி காதல் திருமணம் செய்ததால் அவருக்கு சொத்து கொடுக்கக் கூடாது என்று பிரதிவாதிகள் கூட்டாக செயல்பட்டு வருகிறார்கள். வாதி பாகம் கேட்டு வா.சா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதன் பிறகு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

12. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், வழக்கு சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்று கூறியுள்ளார். 4, 5 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், 1ம் பிரதிவாதியின் சொத்து என்று கூறியுள்ளார்கள். அவர்களுக்கு வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து என்பது தெரிய வாய்ப்பு இல்லை. வாதிக்கு உடல்நிலை சரியில்லாத போது 5ம் பிரதிவாதி மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்து செலவு செய்ததாக கூறி இருக்கிறார். அதற்கான ஆவணங்கள் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. 5ம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், மருத்துவ செலவு செய்ததற்கான ஆவணங்களை

நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்ற கேள்விக்கு வாதியிடம் உள்ளதாக முற்றிலும் புதிய சங்கதியை கூறியுள்ளார்.

13. வாதி தனது குறுக்கு விசாரணையில், வழக்கு சொத்தை அனைவரும் சேர்ந்து சம்பாதித்து வந்த வருமானம் மூலம் 1ம் பிரதிவாதி மூத்தவர் என்ற பெயரில் கிரையம் வாங்கியதாக கூறியுள்ளார். பாதி கிணறு வெட்டி இருந்ததாகவும் கிரையம் வாங்கிய பிறகு தான் முழுமையாக கிணறு வெட்டி சரி செய்ததாக கூறியுள்ளார். பூர்வீக சொத்தை விற்பனை செய்ததில் வாதி மற்றும் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் சாட்சி கையொப்பம் செய்ததை குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். 100 ஆடுகள் மேய்த்து வந்ததாகவும், விவசாயம் செய்து வந்ததாகவும் கூறியிருக்கிறார். 2019ஆம் ஆண்டில் வீடு கட்டும் போது தான் 1ம் பிரதிவாதி சொத்தை 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து 4ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரிய வந்தது என்று கூறி இருக்கிறார். சொத்தானது அப்பா பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார்.

14. வாதி தரப்பு சாட்சியான வா.சா.4 தனது குறுக்கு விசாரணையில், நான்தான் 1ம் பிரதிவாதிக்கு முன் நின்று கிரையம் வாங்கி கொடுத்தேன். வாதி ஆடு, மாடு மேய்த்து வந்த வருமானம் கொண்டு கூட்டாக கிரையம் வாங்கப்பட்டது என்று சாட்சியம் அளித்திருக்கிறார். பிரதிவாதி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வாதி காதல் திருமணம் செய்தது தங்களுக்கு பிடிக்கவில்லை என்றும், எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரம் தனக்கு தெரியாது என்றும், வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றும், வாதியுடன் கூட்டுக் குடும்பமாக இருந்ததை ஒப்புக் கொண்டுள்ளார். வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கூட்டு குடும்பமாக இருந்தோம் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். கூட்டு குடும்பமாக சொத்து வாங்கப்பட்டது என்றும், கூட்டு குடும்ப சொத்து என்பதால் தான் கிரையம் கொடுத்த போது அனைவரும் கையொப்பம் போட்டோம் என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். பி.வா.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பு வாதி நீலகண்டன் மற்றும் 1ம் பிரதிவாதி குடும்பத்தில் நடந்த விபரம் தெரியாது என்று ஒப்புக்கொண்டுள்ளார். வழக்கு சொத்துக்கள் கூட்டு கூட்டு குடும்ப சொத்து என்பதை நிரூபணம் செய்துள்ளார். வாதிக்கு 1/4 பாகப்பிரிவினை கிடைக்கக்கூடியது வழக்கினை அனுமதிக்க வேண்டும் என்று எழுத்து மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>15. 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம்:</u>**

1ம் பிரதிவாதி தந்தை வாதி மற்றும் 2 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மகன் மகள்கள் ஆவார்கள். 4, 5 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை கிரையம் பெற்ற நபர்கள் ஆவார்கள். வாதியின் வழக்கு என்னவென்றால் கூட்டுக் குடும்ப சொத்து என்றும்

அதில் வாதிக்கு 1/4 பங்கு பாகம் உள்ளது என்றும், வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி தனது சுய வருமானத்தின் மூலம் வா.வா.ஆ.1ன் மூலம் கிரையம் வாங்கியுள்ளார். 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தாகும். வா.சா.ஆ.1ல் சாட்சி கையொப்பம் செய்துள்ள சாட்சிகளை வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். 1ம் பிரதிவாதி தனது சுய சம்பாத்தியம் மூலம் வாங்கிய சொத்து என்பதால் அந்த சொத்தை 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார். 4ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளார். மேற்படி விற்பனைகள் சட்டப்படி ஏற்புடையதாகும். 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த ஆவணத்தில் தனது சுய சம்பாத்தியம் மூலம் வாங்கிய சொத்து என்று விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தனக்கு பாகமாக கிடைத்த சொத்தை வா.சா.ஆ.2ன் மூலம் விற்பனை செய்துள்ளார். 1ம் பிரதிவாதிக்கு பாகமாக கிடைத்த சொத்து என்பதால் அது அவரின் தனிப்பட்ட சொத்தாகும். அதனை அவர் விற்பனை செய்ய அவருக்கு உரிமை உள்ளது. அது கூட்டு குடும்ப சொத்து ஆகாது. 1ம் பிரதிவாதி தனக்கு பாகமாக கிடைத்த சொத்தை விற்பனை செய்த ஆவணத்தில் வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் சாட்சிகளாக தான் கையொப்பம் செய்திருக்கிறார்கள். வாதி மற்றும் 2, 3 பிரதிவாதிகள் விற்பனை செய்ததாக அதில் விவரம் எதுவும் இல்லை.

16. வாதி தனது குறுக்கு விசாரணையில், தான் படிக்கவில்லை என்று கூறியிருக்கிறார். ஆனால் வா.சா.2 முதல் வா.சா.4 வரையிலான சாட்சிகள் வாதி தங்கள் ஊரில் உள்ள பள்ளியில் படித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள். வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிரதிவாதிகள் தரப்பில் அனுப்பிய பதில் அறிவிப்பில் 1ம் பிரதிவாதியின் சுய சம்பாத்திய சொத்து என்று விவரம் கூறி பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியின் 2வது மகள் திருமணத்திற்காக சேர்த்து வைத்திருந்த நகையை வாதி எடுத்துச் சென்று விட்டதால் இதுவரையிலும் 2வது மகளுக்கு திருமணம் நடைபெறவில்லை. வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வாதி நீலகண்டன் பள்ளியில் படித்தார் என்று கூறியுள்ளார். வா.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வாதியும், அவரது பெற்றோரும் தனித்தனியாக உள்ளனர் என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.4 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், நான் தான் கிரையம் பேசி 1ம் பிரதிவாதிக்கு வாங்கி கொடுத்தேன். சொத்து வாங்கும்போது வாதி சிறியவர் என்று கூறி சாட்சியம் அளித்திருக்கிறார். 1ம் பிரதிவாதி தனது சாட்சியத்தில், வாதி காதல் திருமணம் செய்து கொண்ட போது வீட்டில் இருந்த நகையை எடுத்துச் சென்றுவிட்டார். மகன் என்பதால் அது குறித்து புகார் கொடுக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.1ன் மூலம் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். கிணறு பிறகு வெட்டியதாக கூறியிருப்பது உண்மையல்ல. வா.சா.ஆ.1ல் கிணறு, பம்புசெட் உள்ளதாகவும், மின் இணைப்பு உள்ளதாகவும் குறிப்பிட்டு தான் கிரையம்

வாங்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாவா சொத்து கூட்டு குடும்ப வருமானத்தின் மூலம் வாங்கப்பட்டது என்று நிரூபணம் செய்யவில்லை. கூட்டு குடும்ப சொத்தாக கிரையம் வாங்கப்பட்டதாக விவரம் இல்லை. சுய சம்பாத்தியமாக வாங்கிய சொத்தை விற்பனை செய்வதாக 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த ஆவணத்தில் விபரம் சொல்லப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சுய சம்பாத்திய சொத்து என்பதால் வாதி வழக்கு சொத்தில் பாகம் கோர முடியாது. கூட்டு குடும்ப சொத்து என்பதை வாதி நிரூபணம் செய்யவில்லை. வாதி தரப்பு வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

**17. 4, 5 பிரதிவாதிகள் தரப்பு எழுத்து மூல வாதுரையின் சுருக்கம்:**

வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சுய சம்பாத்திய சொத்தாகும். வாதியை, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது, உறவு முறைகளை ஒப்புக்கொண்டுள்ளார். தனக்கு எழுத படிக்க தெரியாது என்று கூறியுள்ளார். வா.சா.ஆ.1 தனது தகப்பனார் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். 1ம் பிரதிவாதி அவருடைய சகோதரர்களுடன் பூர்வீக சொத்துக்களை பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவித்து வந்தார் என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். பாகம் பிரித்த பிறகு அவருக்கு வந்த பாக சொத்தை வா.சா.ஆ.2 முன்னிலையில் கிரையம் செய்து கொடுத்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். பாகம் பிரிக்கும்போது வாதி பிறக்கவில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளார். பூர்வீக சொத்து பாகம் பிரித்த வகையில் 1ம் பிரதிவாதிக்கு பாகம் கிடைத்ததால் அது அவருடைய தனிப்பட்ட சொத்தாகும். 1ம் பிரதிவாதி விற்பனை செய்யும் போது வாதி சாட்சி கையொப்பம் மட்டுமே செய்துள்ளார். சாட்சி கையொப்பம் செய்த காரணத்திற்காக மட்டும் அவருக்கு உரிமை இருப்பதாக ஏற்க முடியாது. வாதி சிறுவயதிலேயே ஒரு பெண்ணை காதலித்து குடும்பத்தில் எந்த அக்கறையும் இல்லாமல் ஊதாரியாக இருந்து வந்து 1ம் பிரதிவாதி அவருடைய மகளின் திருமணத்திற்கு சேர்த்து வைத்திருந்த நகைகளை திருடி சென்று விட்டார். 1ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் அவருடைய சொந்த வருவாயைக் கொண்டு கிரையம் வாங்கியதும் அதனை விற்பனை செய்த விபரமும் வாதிக்கு நன்றாக தெரியும். அந்த விவரம் 2019 ஆண்டு தான் தனக்கு தெரிய வந்ததாக வழக்கிற்காக பொய்யான விவரம் கூறியிருக்கிறார். வாதி தனிப்பட்ட முறையில் சில சொத்துக்களை வாங்கி அனுபவம் செய்து வருகிறார். வாதி எழுத படிக்கத் தெரியாது என்று சொல்லி உள்ளார். ஆனால், வாதி தரப்பு சாட்சிகளான வா.சா.2 தனது சாட்சியத்தில், வாதி ஆகாரம் கிராமத்தில் உள்ள பள்ளியில் படித்து வந்தார் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். இதிலிருந்து வாதி வழக்கில் பல பொய்யான சங்கதிகளை கூறி வழக்கு சொத்துகளில் உரிமை இல்லாமல் தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி எப்போதும் கூட்டுக் குடும்பமாக இருந்தது கிடையாது. வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், 1ம் பிரதிவாதி பூபதி என்பவரால் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். 1ம்

பிரதிவாதி பூபதி தாவா சொத்துகளை ஆடுகளை விற்று தான் வாங்கினார் என தெரிவித்துள்ளார். எனவே, வழக்கு சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துகள் ஆகும். வா.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கினார் என்று ஒப்புக் கொண்டுள்ளார். வழக்கு சொத்தை 4ம் பிரதிவாதி இளங்கோவிற்கு விற்று விட்ட விவரமும் அவரிடமிருந்து 5ம் பிரதிவாதி தட்சிணாமூர்த்தி கிரையம் பெற்ற விவரம் தெரியும் என்று தெரிவித்துள்ளார். வாதி சிறு வயதிலேயே திருமணம் செய்துகொண்டு தனியாக சென்று விட்டதாக வா.சா.3 சாட்சியம் அளித்துள்ளார். எனவே வாதி கூட்டு குடும்பமாக 1 முதல் 3 பிரதிவாதிகளுடன் இருந்ததில்லை என்பது தெளிவாகிறது. அவருக்கு எந்தவிதமான வருவாயும் இல்லை. மேலும் வா.சா.3 தனது சாட்சியத்தில், பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கறிஞர் சொல்ல சொன்னதின் பேரில் சொன்ன தகவல்கள் என்று கூறி இருக்கிறார். வா.சா.4 தனது குறுக்கு விசாரணையின் போது 1ம் பிரதிவாதி பூபதிக்கு நான் தான் வழக்கு சொத்தை கிரையம் பேசி முடித்து கிரையம் வாங்கி கொடுத்தேன். வாதி பள்ளிக்குச் சென்று நின்று விட்டதாகவும் கூறியுள்ளார். தாவா சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்களில் உள்ள சங்கதிகளை மறைப்பதற்காக வாதி பொய்யான தகவலை கூறியிருக்கிறார். பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், வா.சா.ஆ.1ன் மூலம் ஆதிமூலம் என்பவரிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கினார். அப்போது ஒன்றாக இருந்தோம் என்றால் இல்லை என்று மறுப்பு தெரிவித்துள்ளார். ஆடு மாடுகள் விற்பனை செய்து தாவா சொத்துகளை வாங்கினேன் என்றும், வாதிக்கும் அந்த சொத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று 1ம் பிரதிவாதி சாட்சியம் அளித்துள்ளார். வாதி 15 வயதிலேயே திருமணம் செய்து கொண்டு பெற்றோருக்கு ஆதரவாக இல்லாமல் சென்று விட்டார். கூட்டு குடும்பமாக இருக்கும் போது வாங்கப்பட்டது என்றால் இல்லை என தெளிவாக மறுத்துள்ளார். தான் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கிய சொத்து என 1ம் பிரதிவாதி சாட்சியம் அளித்துள்ளார். 1ம் பிரதிவாதியின் மனைவி சாந்தி பி.வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், தாவா சொத்துக்கள் கிரையம் வாங்கும்போது கிணறு, பம்பு செட் இருந்ததாக தெரிவித்துள்ளார். கிரையம் வாங்க நானும், எனது கணவரும் விவசாயம் மற்றும் வண்டி மாடு ஓட்டி சம்பாதித்தோம் என தெரிவித்துள்ளார். சொத்துக்களை விற்பனை செய்த விவரம் வாதிக்கு அப்போதே தெரியும் எனவும் கூறியுள்ளார். 5ம் பிரதிவாதி தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில், 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சுய சம்பாத்திய சொத்து என்றும், அவரது குடும்ப கடனுக்காக 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து அவர் பட்டா பெயர் மாற்றம் செய்து தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தார். அதன் பிறகு 4ம் பிரதிவாதிடமிருந்து , 5ம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்று பட்டா பெயர் மாற்றம் செய்து அனுபவித்து வருகிறார். 5ம் பிரதிவாதி வசம் சொத்து இருந்து

வருகிறது. அடமானம் வைத்து கடன் பெற்று தவணைகளை 5ம் பிரதிவாதி செலுத்தி வருகிறார். 5ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவித்து வருவதை தெரிந்து காழ்ப்புணர்ச்சியுடன் இந்த வாதி எந்த உரிமையும் இல்லாமல் பொய்யான தகவல்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்குமூலம் இல்லாமல் தாக்கல் செய்துள்ள வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எழுத்து மூலமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

18. வாதியின் வழக்குரை, பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையிலிருந்து இவ்வழக்கை தீர்வு காண 08.11.2022ம் தேதி பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டது.

1. Whether the Plaintiff is entitled for partition of the suit properties and for allotment of 1/4 share in the suit properties as prayed for?

2. To what other relief, the Plaintiff is entitled for?

19. வாதி தரப்பில், 1ம் வாதி வா.சா.1 திரு.நீலகண்டன், வா.சா.2 திரு.ஆறுமுகம், வா.சா.3 திரு.கார்மேகம், வா.சா.4 திரு.கன்னியப்பன் ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். 14.05.2003 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1, 12.07.2006 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2, 02.03.2007 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3, 28.11.2007 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4, 01.09.2014 தேதியிட்ட அடமானம் போடப்பட்ட பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5, 01.11.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் வா.சா.ஆ.6, 1ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.7, 2ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.8, 3ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.9, 4ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.10, 5ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.11, 6ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.12, 18.11.2019 தேதியிட்ட பதில் அறிவிப்பு வா.சா.ஆ.13, 18.11.2019 தேதியிட்ட 4ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு வா.சா.ஆ.14, 05.11.2019 தேதியிட்ட 6ம் பிரதிவாதியின் பதில் வா.சா.ஆ.15, 1ம் அயிட்டச் சொத்திற்கான வழிகாட்டுதல் மதிப்பு மற்றும் சொத்து மதிப்பு பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.16, 2ம் அயிட்டச் சொத்திற்கான வழிகாட்டுதல் மதிப்பு மற்றும் சொத்து மதிப்பு பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ.17, 10.10.2019 தேதியிட்ட வில்லங்க சான்று வா.சா.ஆ.18, ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது) வா.சா.ஆ.19, வம்சாவழி பட்டியல் வா.சா.ஆ.20, வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்திரல் உள்ள

வா.சா.2ன் சாட்சி கையெழுத்து வா.சா.ஆ.21, வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்திரல் உள்ள வா.சா.4ன் சாட்சி கையெழுத்து வா.சா.ஆ.22 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

20. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பி.வா.சா.1 பூபதி, பி.வா.சா.2 திருமதி.சாந்தி, பி.வா.சா.5 திரு.தட்சிணாமூர்த்தி ஆகியோர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பிரதிவாதிகள் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்பட்டவில்லை.

21. இவ்வழக்கினை தீர்வு காண்பதற்கு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 14 விதி 5ன் கீழ் கீழ்கண்ட கூடுதல் எழுவினா வனையப்படுகிறது.

1. வழக்கு சொத்துக்கள் மூதாதையர் சொத்தை விற்பனை செய்து வந்த வருமானம் மூலம் வாங்கப்பட்ட கூட்டு குடும்ப சொத்து என்று வாதி கூறியிருப்பது சரியா?

**22. கூடுதல் எழுவினாவிற்க்கான தீர்வு:-**

1. வழக்கு சொத்துக்கள் மூதாதையர் சொத்தை விற்பனை செய்து வந்த வருமானம் மூலம் வாங்கப்பட்ட கூட்டு குடும்ப சொத்து என்று வாதி கூறியிருப்பது சரியா?

வாதி தனது வழக்குரையில், வாதியும், 2, 3 பிரதிவாதிகளும் 1ம் பிரதிவாதியின் மகன் மற்றும் மகள்கள் என்றும், 5ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் கணவர் என்றும் விவரம் கூறியுள்ளார். மேற்படி உறவுமுறையை 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 4, 5 பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் ஒப்புக்கொண்டுள்ளார்கள். வாதி தனது வழக்குரையில், வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டு குடும்பமாக இருந்த காலத்தில், 1ம் பிரதிவாதி ஆதிமூலம் என்பவரிடமிருந்து ஆவண எண்.3535/2003 என்ற கிரைய ஆவணம் மூலம் 14.05.2003ல் கிரையம் பெற்றதாக வழக்குரையின் 4வது பத்தியில் விவரம் கூறியிருக்கிறார். வழக்கு சொத்தை கிரையம் பெறும்போது ஆதிமூலம் கிணறு வெட்டி பாதியில் நிறுத்தி வைத்திருந்ததாகவும், வாதியும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டு குடும்பமாக இருந்தபோது பூர்வீக சொத்தை 12.07.2006ல் விற்பனை செய்து வந்த பணத்தை கொண்டு பாதியில் இருந்த கிணற்றை முழுவதுமாக வெட்டி தண்ணீர் பாய்ச்சும் அளவிற்கு தரமான கிணறு வெட்டி பம்புசெட் அமைத்து மின் இணைப்பு வாங்கி கூட்டு குடும்பமாக பயிர் செய்து வந்தார்கள். மூதாதையர் சம்பாதித்த கூட்டு குடும்ப சொத்துக்களை விற்கும்போது அந்த கிரைய பத்திரத்தில் கூட்டு குடும்ப சொத்தின் பங்குதாரர் என்ற முறையில் வாதி சாட்சி கையொப்பம் செய்துள்ளார். அதன்பின்பு வழக்கு சொத்துக்களை வாதியும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டு குடும்பமாக அனுபவித்து வந்தார்கள். கூட்டு குடும்பத்தார் என்ற முறையில்,

வாதிக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் வழக்கு சொத்தில் தலா 1/4 பாகம் உடையது என்று வழக்குரையில் விவரம் கூறப்பட்டுள்ளது. மேலும், வழக்குரையின் 6வது பத்தியில் வழக்கு சொத்துக்கள் அனைத்தும் மூதாதையர் சொத்தை விற்று அவற்றில் வந்த வருமானத்தை வைத்துக்கொண்டு வாங்கப்பட்ட கூட்டு குடும்ப சொத்துக்கள் என்று விவரம் கூறப்பட்டுள்ளது.

23. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை 2, 3 பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அந்த எதிர்வழக்குரையில், வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்பதை மறுத்துள்ளார்கள். 1ம் பிரதிவாதி அவரது தனிப்பட்ட வருவாய் கொண்டு ஆதிமூலம் என்பவரிடமிருந்து 14.05.2003ல் கிரையம் பெற்றார். 1ம் பிரதிவாதி ஆடுகளை மேய்த்தும் வியாபாரம் செய்துக்கொண்டும் ஊரில் உள்ள மற்றவர்கள் நிலங்களில் ஏர் உழுதும் மாட்டு வண்டி ஓட்டியும் தனிப்பட்ட முறையில் சம்பாதித்து சேமித்து வைத்திருந்த வருவாய் கொண்டுதான் தாவா சொத்துக்களை கிரையம் வாங்கினார். வாதிக்கோ அல்லது வேறு யாருக்கோ எந்தவிதமான உரிமையும் கிடையாது என்று விவரம் கூறியிருக்கிறார். 1ம் பிரதிவாதியும், அவர் உடன் பிறந்தவர்களும் பூர்வீக சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டதாகவும், பாகம் பிரித்து தனிப்பட்ட சொத்தாக அனுபவித்து வந்ததாக எதிர்வழக்குரையில் விவரம் கூறியுள்ளார்.

24. 5ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வழக்கு சொத்துக்களை 1ம் பிரதிவாதி அவரது தனிப்பட்ட வருவாய் கொண்டு ஆதிமூலம் என்பவரிடமிருந்து 14.05.2003ல் கிரையம் பெற்று அவர் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வந்து அவருடைய குடும்ப செலவிற்காகவும், சில கடன்களை பைசல் செய்யவும், சரியான பிரதிபலனுக்கு 02.03.2007ல் 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டார். 4ம் பிரதிவாதியிடமிருந்து 5ம் பிரதிவாதி சரியான பிரதிபலனுக்கு 28.11.2007ல் கிரையம் பெற்று பட்டா மாற்றம் செய்துக்கொண்டு தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறார். 5ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை 6ம் பிரதிவாதியிடம் அடமானம் வைத்து கடன் பெற்று முறையாக தவணைகளை செலுத்தி வருகிறார் என்று விவரம் கூறப்பட்டுள்ளது.

25. வழக்கு சொத்துக்கள் வாதி கூறியிருப்பதைபோல் கூட்டு குடும்ப சொத்தா அல்லது 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தா என்பதை முதலில் தீர்வு காணப்படவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மூதாதையர் சொத்தை விற்பனை செய்தும், அதில் வந்த வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட கூட்டு குடும்ப சொத்து என்று வழக்கு சொத்து குறித்து வழக்குரையின் 6வது பத்தியில் விவரம் கூறப்பட்டுள்ளது. வழக்குரையில் மூதாதையர் சொத்து என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. எந்த சர்வே எண்ணில் எந்த ஊரில் அமைந்த சொத்து யார் யாருக்கு விற்பனை செய்தது எவ்வளவு

தொகைக்கு விற்பனை செய்யப்பட்டது என்ற விவரம் எதுவும் வழக்குரையில் தெளிவாக குறிப்பிடப்படவில்லை. வழக்கு சொத்துக்களை 1ம் பிரதிவாதி 14.05.2003ம் தேதி ஆதிமூலம் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக வழக்குரையில் விவரம் கூறப்பட்டுள்ளது. அந்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, 1ம் பிரதிவாதி பூபதி பெயரில் கிரையம் பெற்றதாக விவரம் உள்ளது. வா.சா.ஆ.1ல் சொத்து விவரத்தில் சர்வே எண்.206/6A ஏக்கர் 0.95 சென்டில் 49 சென்ட் இடமும், சர்வே எண்.295/1ல் ஏக்கர் 1.51 மற்றும் 206/6A–ல் உள்ள கிணர் பூராவும், இதன் கரையில் உள்ள செட் கட்டிடமும் அதில் பொருந்தியுள்ள 5 H.P. மின் மோட்டார் பம்புசெட் மின் இணைப்பு SC.No.335அதன் டெபாசிட் உள்பட சேர்த்து கிரையம் கொடுக்கப்பட்டதாகவும், மின் சர்வீஸ் தங்கள் பெயரில் மாற்றிக்கொள்ள எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று விவரம் கூறப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ன் மூலம் கிரையம் வாங்கும்போதே கிணறும், பம்புசெட் மற்றும் மின் இணைப்பு இருந்துள்ளது என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.1ன் அடிப்படையில் பார்க்கும்போது, தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்பதும், 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பது தெரியவருகிறது. 1ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் 4வது பத்தியில், ஆடுகளை மேய்த்து வியாபாரம் செய்தும், ஊரில் உள்ள மற்றவர்கள் நிலங்களில் ஏர் உழுதும், மாட்டு வண்டி ஓட்டியும், தனிப்பட்ட முறையில் சம்பாதித்து சேமித்து வைத்திருந்த வருவாய் கொண்டு தாவா சொத்துக்களை கிரையம் வாங்கியதாக விவரம் கூறியிருக்கிறார். 1ம் பிரதிவாதியான பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், ஆடு, மாடு விற்றுதான் சொத்தினை வாங்கினேன். வாதிக்கும் அந்த சொத்திற்கும் எந்த சம்மதமும் இல்லை என்றும், தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கிய சொத்து என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி பெயரில் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வருவாய் கொண்டு தாவா சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டது என்பது தெரியவருகிறது.

26. வாதியான வா.சா.1 ஐ 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கடந்த 20.09.2023ல் குறுக்கு விசாரணை செய்தபோது, 5வது பத்தியில் என் அப்பா தனது பூர்வீக சொத்தை கவிதா என்பவருக்கு விற்றார் என்றால் சரிதான். என் தாத்தா பெயர் பொன்னுசாமி ஆகும். என் தாத்தாவிற்கு என் அப்பா பூபதி, ரிஷிகேசன் மற்றும் தேவராஜ் ஆகியோர் பிள்ளைகள் ஆவார்கள் என்றால் சரிதான். என் தாத்தா இறந்த பிறகு அவரது பிள்ளைகள் மூவரும் தங்கள் பூர்வீக சொத்தினை பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில், என் அப்பாவிற்கு பாகமாக வந்த சொத்தினைதான் என் அப்பா கவிதாவிற்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். என் அப்பா மற்றும் அவரது சகோதரர்கள் பாகம்

பிரித்துக்கொண்டபோது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். நான் பிறந்த பிறகு என் அப்பாவிற்கும் அவரது சகோதரர்களுக்கும் இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான் என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார். வாதி குறிப்பிட்டிருக்கும் மூதாதையர் சொத்தை 1ம் பிரதிவாதி விற்பனை செய்ததற்கான ஆவணமாக வா.சா.ஆ.2 சான்றிட்ட நகலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை ஆராய்ந்து பார்க்கும்போது 1ம் பிரதிவாதி பூபதி, கவிதா என்பவருக்கு 12.07.2006ல் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஆகும். அதில் எனக்கு பிதுர்ராஜ்ஜித முன்னிலைக்கு பாத்தியப்பட்டு நான் அனுபவித்து வரும் புஞ்சை நிலத்தை விற்பனை செய்வதாக விவரம் கூறப்பட்டுள்ளது. சொத்து விவரத்தில் 3ல் 1 பங்கு என்று குறிப்பிட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.2ல் 1ம் பிரதிவாதி மட்டுமே கிரையம் கொடுப்பவராக விவரம் உள்ளது. வாதி கூறுவதுபோல் மூதாதையர் சொத்தில் வாதிக்கு உரிமை இருந்தால் வா.சா.ஆ.2ன் மூலம் 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து வாதியும் கிரையம் கொடுக்கும் நபராக இருந்திருப்பார். ஆனால், வாதி வா.சா.ஆ.2ல் சாட்சி கையொப்பம் மட்டுமே போட்டுள்ளார். மூதாதையர் சொத்து விற்பனை செய்து அதன் மூலம் வழக்கு சொத்துக்கள் வாங்கப்பட்டதாக வழக்குரையில் விவரம் கூறப்பட்ட நிலையில், வா.சா.ஆ.1ல் 14.05.2003ல் வழக்கு சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. ஆனால், வா.சா.ஆ.2ன் மூலம் 12.07.2006ல் 1ம் பிரதிவாதி சொத்துக்களை விற்பனை செய்துள்ளார். 2006ம் ஆண்டு விற்பனை செய்த சொத்தின் வருவாய் மூலம் 14.05.2003ல் வழக்கு சொத்துக்கள் வாங்கப்பட்டது என்பது ஏற்க்கும்படி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

27. 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.2ன் மூலம் விற்பனை செய்த சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனென்றால், மூதாதையர் சொத்து என்பது ஒரு பொதுவான ஆணின் கீழ் தொடர்ச்சியாக வரும் மூன்று ஆண் வாரிசுகளுக்கு கிடைக்கும் சொத்து மூதாதையர் சொத்தாகும். வா.சா.ஆ.2ல் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் மூதாதையர் சொத்து என்பது வாதி நிரூபணம் செய்யவேண்டியது அவசியமாகும். ஆதியில் வா.சா.ஆ.2ல் சொல்லப்பட்டுள்ள சொத்து யாருக்கு உரிமையாக இருந்தது என்றும், அது எவ்வாறு மூதாதையர் சொத்து என்பதையும் வாதி தனது வழக்குரையில் விளக்கமாக கூறவில்லை. ஆனால், வாதி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், தனது தாத்தா பொன்னுசாமி என்பவரின் வாரிசுகளான தனது தகப்பனார் பூபதி, ரிஷிகேசன் மற்றும் தேவராஜ் ஆகியோர் பாகம் பிரித்துக்கொண்டதாகவும், பாகம் பிரித்த சமயத்தில் தான் பிறக்கவில்லை என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். வாதியின் தாத்தாவான பொன்னுசாமி என்பவருக்கு முன்னர் அந்த சொத்துக்கள் அவரது மூதாதையர்களுக்கு உரிமையாக இருந்த சொத்துக்கள் என்பதை வாதி தரப்பில் குறிப்பிடவில்லை. வாதியின் தகப்பனார் பூபதி மற்றும் அவரது சகோதரர்கள் கூட்டாக அனுபவித்து வந்த சொத்துக்களை

தங்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்ட பிறகு அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகம் அவரவர்களின் தனிப்பட்ட சொத்தாகும். எனவே வா.சா.ஆ.2ன் மூலம் 1ம் பிரதிவாதி விற்பனை செய்த சொத்து அவரின் தனிப்பட்ட சொத்தாகும்.

28. ஒருவருக்கு இந்து கூட்டுக் குடும்ப சொத்தைப் பொறுத்து ஏற்படும் பாகப்பிரிவினையில் கிடைக்கும் பங்கானது தனிப்பட்ட சொத்தாக கருத வேண்டும் என்பது சட்ட நிலையாகும்.

2025 INSC 532 , Supreme Court of India

**Angadi Chandranna vs Shankar on 22 April, 2025**

CIVIL APPEAL NO. 5401 OF 2025 என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் இரு நீதிபதிகள் கொண்ட தீர்ப்பில்,
17. It cannot be disputed that the properties divided among Defendant No.1 and his brothers through partition deed dated 09.05.1986, are joint family properties. However, as per Hindu law, after partition, each party gets a separate and distinct share and this share becomes their self-acquired property and they have absolute rights over it and they can sell, transfer, or bequeath it as they wish. Accordingly, the properties bequeathed through partition, become the self-acquired properties of the respective sharers.

19. As reiterated above, after the joint family property has been distributed in accordance with law, it ceases to be joint family properties and the shares of the respective parties become their self-acquired properties.

29. 17 மற்றும் 19வது பாராவில் கூட்டு குடும்ப சொத்தில் பாகப்பிரிவினை ஏற்படும் போது கிடைக்கும் சொத்தானது யாருக்கு அந்த பாகம் கிடைக்கிறதோ அவருக்கு அது தனிப்பட்ட சொத்து என்று உச்சநீதிமன்றம் தீர்வு கண்டுள்ளது. வாதியின் தகப்பனாரான 1ம் பிரதிவாதி பூபதி மற்றும் அவரது சகோதரர்களாக ரிஷிகேசன் மற்றும் தேவராஜ் ஆகியோர்களுக்கு இடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை அடிப்படையில், 1ம் பிரதிவாதிக்கு கிடைத்த சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து ஆகும். அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதி கவிதா என்பவருக்கு வா.சா.ஆ.2ன் மூலம் தனிப்பட்ட முறையில் கிரையம் கொடுத்துள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

30. வாதி தனது வழக்குரையில், வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்து என்று விவரம் கூறியிருக்கிறார். அதனை நிரூபணம் செய்யவேண்டிய கடமை வாதியை சாரும். வாதி தனது வழக்குரையில், வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டுக்குடும்பமாக இருந்த காலத்தில் வழக்கு சொத்துக்கள் ஆதிமூலம்

என்பவரிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கியதாக விவரம் கூறப்பட்டுள்ளது. 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், வாதி குடும்பத்தில் எவ்வித பொறுப்பும் இல்லாமல், வேலைக்கும் செல்லாமல் ஊதாரியாக வாழ்ந்து வந்தார் என்று கூறி கூட்டுக்குடும்பமாக இருந்ததை மறுத்துள்ளார். வா.சா.1 ஆன வாதி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வா.சா.ஆ.1ன் மூலம் என் அப்பா பெயரில் வீட்டில் மூத்தவர் என்பதால் அவர் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றும், கூட்டு குடும்ப கிரைய சொத்து என்று கூறி சாட்சியம் அளித்துள்ளார். கூட்டு குடும்பம் இருந்தது என்பதை வாதி நிரூபணம் செய்யவேண்டியது அவசியம் ஆகும். 1ம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், 14வது பத்தியில் வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் மூலம் கிரையம் வாங்கும்போது நான், என் மனைவி மகள்கள் சுமதி, ஏகவள்ளி மற்றும் என் மகன் நீலகண்டன் ஒன்றாகதான் குடும்பமாக இருந்தோம் என்றால் இல்லை என்று மறுத்துள்ளார். 15வது பத்தியில் வா.சா.ஆ.1 முன்னிலைக்கு கிரையம் வாங்கும் சமயத்தில் சுமதிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றும், நீலகண்டனுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான் என்றும், நீலகண்டன் திருமணம் செய்துக்கொள்வதற்கு முன்பு வரை நான் என் மனைவி மகள்கள் மற்றும் நீலகண்டன் ஒன்றாக தான் குடும்பம் இருந்தோம் என்றால் சரிதான். ஆடு, மாடு விற்றுதான் அந்த சொத்தினை வாங்கினேன். வாதிக்கும், அந்த சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.1ன் மூலம் வாங்கப்பட்ட வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்ப வருவாய் மூலம் 1ம் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்ட கூட்டு குடும்ப சொத்து என்பதை நிரூபணம் செய்வதற்கு வாதி தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டு குடும்பமாக இருந்தார்கள் என்பதால் மட்டுமே 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்து என்பதை ஏற்க்க முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

31. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் 2025 (6) CTC 152, Siva Guru Vs. Venkatachalam, AS.No.17/2022 dated 02.07.2025 என்ற வழக்கில் கூட்டு குடும்பமாக இருப்பதால் மட்டுமே கூட்டு குடும்ப உறுப்பினர் பெயரில் உள்ள சொத்து கூட்டு குடும்ப சொத்து என்று கருதமுடியாது என்றும், யார் கூட்டு குடும்ப சொத்தாக கூட்டு குடும்ப தலைவர் பெயரில் கிரையம் வாங்கப்பட்டதாக கூறுகிறாரோ அவர்தான் கூட்டுக்குடும்பத்தில் போதிய வருவாய் இருந்தது என்றும், சொத்து வாங்கும் அளவிற்கு கூட்டு குடும்ப வருமானம் அதிக அளவில் இருந்தது என்பதையும், அதன் அடிப்படையில் குடும்ப தலைவர் கர்த்தா பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்பதை ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யவேண்டும். மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில், இந்த வழக்கின் வாதி கூறியிருப்பதை போல் வா.சா.ஆ.1ன் மூலம் வழக்கு சொத்துக்களை கூட்டு குடும்ப சொத்தாக 1ம் பிரதிவாதி பெயரில் அதன்

தலைவர் என்ற முறையில் வாங்குவதற்கு போதுமான கூட்டு குடும்ப வருமானம் இருந்தது என்பதை வாதி நிரூபணம் செய்ய எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எனவே மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில், வழக்கு சொத்துக்களை 1ம் பிரதிவாதி பெயரில் கூட்டு குடும்ப வருமானத்தின் மூலம் வாங்கப்பட்டது என்பது வாதி தரப்பில் நிரூபணம் செய்யவில்லை. மேலும், வா.சா.ஆ.1ன் மூலம் தாவா சொத்துக்கள் வாங்கும்போது 2ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகி அவர் அவருடைய கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்பது தெரியவருகிறது. எனவே வாதி கூறியிருப்பதைபோல் வழக்கு சொத்துக்கள் 1ம் பிரதிவாதியால் கிரையம் பெறும்போது வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் அடங்கிய கூட்டு குடும்பம் இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்து என்பதை வாதி நிரூபணம் செய்ய தவறியிருக்கிறார். மேலும், மூதாதையர் சொத்து விற்பனை செய்து வந்த வருமானத்தின் அடிப்படையில், வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்தாக கிரையம் பெறப்பட்டது என்பது வாதி தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்த கூடுதல் எழுவினாவிற்கு இந்த நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**32. எழுவினா–1ற்க்கான தீர்வு:–**

1. Whether the Plaintiff is entitled for partition of the suit properties and for allotment of ¼ share in the suit properties as prayed for?

வா.சா.ஆ.2 மூலம் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வருவாய் கொண்டு 1ம் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்ட 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். வா.சா.ஆ.1ன் மூலம் 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை கிரையம் பெற்றபோது, 2ம் பிரதிவாதிக்கு திருமணம் நடந்துவிட்டது என்று 1ம் பிரதிவாதி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் கூறியுள்ளார். எனவே தாவா சொத்துக்கள் கிரையம் வாங்கும்போது வாதி கூறியிருப்பதைபோல், வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் அடங்கிய கூட்டு குடும்பம் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. 14.05.2003 தேதியன்று வாங்கப்பட்ட கிரைய ஆவணமான வா.சா.ஆ.1ல் கிணர் மற்றும் செட் கட்டிடம், மின் இணைப்பு எண்.335 ஆகியவை குறிப்பிட்டு கிரையம் பெறப்பட்டுள்ளது. எனவே வாதி வழக்குரையில் கூறியிருப்பது போல் 12.07.2006 தேதியன்று வா.சா.ஆ.2ன் மூலம் விற்பனை செய்த சொத்து வருவாய் மூலம் தரமான கிணறு வெட்டப்பட்டு பம்புசெட் அமைத்து மின் இணைப்பு வாங்கி கூட்டு குடும்பமாக பயிர் செய்து வந்தார்கள் என்ற வாதி தரப்பு வழக்குரை விவரம் உண்மையானது அல்ல என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

33. வாதி தரப்பில் வாதம் செய்யும் போது வா.சா.ஆ.1ன் மூலம் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றது கூட்டு குடும்ப சொத்தாகும். அவ்வாறு கூட்டுக் குடும்ப சொத்து கிரையம் பெற்ற பிறகு கிணறு வெட்டி வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள். வாதி ஒரு பெண்ணை விரும்பி திருமணம் செய்து கொண்டார். வாதி காதல் திருமணம் செய்து கொண்டு சென்னைக்கு சென்று விட்டார். அவ்வாறு காதல் திருமணம் செய்து கொண்டு சென்னைக்கு செல்வதற்கு முன்பாக 100 ஆடுகள் மற்றும் 25 சவரன் தங்க நகைகளை கூட்டு குடும்பத்தில் விட்டுச் சென்றார். காதல் திருமணம் செய்து கொண்டதால் வாதிக்கு சொத்துக் கொடுக்கக் கூடாது என்று 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு வாதியின் 1/4 பாக சொத்தையும் சேர்த்து விற்பனை செய்துள்ளார். 4ம் பிரதிவாதியிடமிருந்து, 5ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார். வாதியான வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், அனைவரும் சேர்ந்து சம்பாதித்தோம். 100 ஆடுகள் மேய்த்து வந்தேன். விவசாயம் செய்து வந்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். எனது அப்பா பெயரில் கூட்டு குடும்ப சொத்தாக வாங்கப்பட்டது. வா.சா.4 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் வாதி ஆடு மாடு மேய்த்த வருமானம் கொண்டு கிரையம் வாங்கப்பட்டது என்று கூறி சாட்சியம் அளித்திருக்கிறார். எனவே வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்து ஆகும். வாதிக்கு 1/4 பாகம் கிடைக்கக்கூடியது என்று வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதி தரப்பு வாதம் ஏற்கும் வகையில் இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனென்றால் கூட்டுக் குடும்ப வருமானம் இருந்தது என்பதை வாதி நிரூபணம் செய்யவில்லை. வழக்கு சொத்துக்களை வா.சா.ஆ.1ன் மூலம் கிரையம் பெறுவதற்கு கூட்டு குடும்ப வருமானம் பயன்படுத்தப்பட்டது என்பதை வாதி ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை. சொத்து வாங்கும் அளவிற்கு கூட்டுக் குடும்பத்தில் போதிய மிதமிஞ்சிய வருமானம் இருந்தது என்பதை வாதித்தரப்பில் நிரூபணம் செய்வதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மூதாதையர் சொத்தை விற்பனை செய்து வழக்கு சொத்துக்கள் வாங்கப்பட்டதாக வழக்குரையில் கூறியுள்ள நிலையில், கூட்டு குடும்ப சொத்தாக வாங்கப்பட்டது என்று கூறி இருப்பது முரண்பாடாக உள்ளது. மூதாதையர் சொத்து என்பது மூன்று தலைமுறை ஆண் வாரிசுகள் மூலம் கிடைக்கக்கூடிய சொத்தாகும். 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.2 மூலம் விற்பனை செய்த சொத்து மூதாதையர் சொத்து என்பதை வாதி நிரூபணம் செய்யவில்லை. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்த பிறகு 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரர்களும் தங்களுக்குள் சொத்தை பாகம் பிரித்துக் கொண்டதாக வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தின் மூலம் தெரிய வருகிறது. 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு முன்பு யாருக்கு அந்த சொத்து உரிமையாக இருந்தது என்பது குறித்து வாதி விவரம் எதுவும் கூறவில்லை. 1ம் பிரதிவாதியின் தந்தையின் தந்தைக்கு மேற்படி சொத்து உரிமையாக இருந்தது என்பதை வாதி நிரூபணம் செய்தால்தான் வா.சா.ஆ.2ன் மூலம் விற்பனை

செய்யப்பட்ட 1ம் பிரதிவாதியின் பாக சொத்து மூதாதையர் சொத்து என்ற அடிப்படையில் வரும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மூன்று தலைமுறை குறித்து வாதி நிரூபணம் செய்யவில்லை. எனவே 1ம் பிரதிவாதியின் தகப்பனார் இறந்த பிறகு 1ம் பிரதிவாதியும், அவரது சகோதரர்களும் பாகம் பிரித்துக் கொண்ட சொத்தானது அவர்களின் தனிப்பட்ட சொத்து ஆகும். எனவே வா.சா.ஆ.2ல் சொல்லப்பட்டுள்ள சொத்து மூதாதையர் சொத்து என்ற தன்மை கொண்ட சொத்து அல்ல என்று நீதிமன்றம் முடிவு செய்கிறது. மூதாதையர் சொத்து விற்பனை செய்த வருமானத்தின் மூலம் வழக்கு சொத்துக்கள் வா.சா.ஆ.1ன் மூலம் வாங்கப்பட்டதாக வாதி கூறியிருப்பது ஏற்கும் படி இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வாதி காதல் திருமணம் செய்து கொண்டு சென்னைக்கு சென்ற போது 100 ஆடுகள் மற்றும் 25 சவரன் தங்க நகைகளை கூட்டுக் குடும்பத்தில் விட்டுச் சென்றதாக கூறியிருப்பதற்கு எந்த ஒரு ஆதாரமும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் கூட்டு குடும்பத்தின் கர்த்தா அல்லது குடும்ப தலைவர் என்ற முறையில் கிரையம் பெறப்பட்டதாக வாசகம் எதுவும் இல்லை. எனவே வாதி தனது தரப்பு சான்றாவணங்கள் மூலம் தாவா சொத்துக்கள் குடும்பத் தலைவர் அல்லது கர்த்தா என்ற முறையில் 1ம் பிரதிவாதியால் கூட்டு குடும்ப சொத்தாக கிரையம் பெறப்பட்டது என்பதை நிரூபணம் செய்ய தவறி இருக்கிறார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

34. மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளை 2025: MHC: 2703, Smt.Vijaya Vs. Rajkumar(Died) and others, AS.(MD)No.147/2019, dated 26.11.2025 என்ற வழக்கில்

46. The learned counsel for the respondents 1, 2, 4 to 7 and 16 to 18 further relied on the judgment of the Hon'ble Supreme Court in Appasaheb PeerappaChamdgade vs. Devendra Peerappa Chamdgade and others reported in(2007) 1 SCC 521, and in particular to Paragraph 17, wherein it was held asfollows:-

"17. Therefore, on survey of the aforesaid decisions what emerges is that there is no presumption of a joint Hindu family but on the evidence if it is established that the property was joint Hindu family property and the other properties were acquired out of that nucleus, if the initial burden is discharged by the person who claims joint Hindu family, then the burden shifts to the party alleging self-acquisition to establish affirmatively that the property was acquired without the aid of the joint family property by cogent and necessary evidence.' என்று இரு நீதிபதிகள் அடங்கிய குழு வழங்கிய தீர்ப்பில் கூட்டு குடும்ப சொத்து என்று கூறுபவர் முதலில் அதை நிரூபணம் செய்யவேண்டும். அவ்வாறு கூட்டு குடும்ப சொத்து என்று நிரூபணம் செய்து விட்டால் பின்னர் தனிப்பட்ட சொத்து என்று கூறும் நபர் தகுந்த சாட்சியங்கள் மூலம் கூட்டு

குடும்ப வருமானம் இல்லாமல் தனிப்பட்ட வருமானம் கொண்டு வாங்கப்பட்டது என்று நிரூபணம் செய்யவேண்டும் என்று தீர்வு கண்டுள்ளது.

35. வாதி இந்த வழக்கில் மூதாதையர் சொத்து விற்பனை செய்து வந்த வருமானம் கொண்டு கூட்டு குடும்ப சொத்தாக வழக்கு சொத்துக்கள் வாங்கப்பட்டதாக கூறியுள்ளார். மேற்படி முன் தீர்ப்பின் அடிப்படையில், வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்று நிரூபணம் செய்யவேண்டிய ஆரம்ப நிலை மெய்பிக்கும் சுமை வாதியை சாரும். 1ம் பிரதிவாதிக்கு அவரது சகோதரர்களுடன் ஏற்பட்ட பாக பிரிவினையின் மூலம் கிடைத்த சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்தாகும். வா.சா.ஆ.2ன் மூலம் விற்பனை செய்த தொகை கொண்டு வழக்கு சொத்துக்கள் வா.சா.ஆ.1ன் மூலம் கிரையம் வாங்கப்படவில்லை. ஏனென்றால் வழக்கு சொத்துக்கள் 2003ம் ஆண்டில் வாங்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி தனது பாகத்திற்கு கிடைத்த சொத்தை 2006ம் ஆண்டில் விற்பனை செய்துள்ளார். மேலும் வா.சா.ஆ.2ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மூலம் வருவாய் வந்தது என்பதை வாதி நிரூபணம் செய்யவில்லை. தாவா சொத்துக்களை வாங்கும் அளவிற்கு கூட்டு குடும்ப வருமானம் மிதமிஞ்சிய வகையில் இருந்தது என்பதையும் வாதி நிரூபணம் செய்யவில்லை. எனவே தாவா சொத்துக்கள் கூட்டு குடும்ப வருமானம் மூலம் வாங்கப்பட்டது என்பதை வாதி நிரூபணம் செய்ய தவறியிருப்பதால், வழக்கு சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

36. வா.சா.ஆ.1ன் மூலம் 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். அவற்றை 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த வா.சா.ஆ.3ல் நான் சுயாஜ்ஜிதமாய் சென்ற 14.05.2003ம் தேதியில் ஆகாரம் கிராமத்தில் வசிக்கும் எஸ்.ஆதிமூலம் என்பவர் மூலம் கிரையம் பெற்று அன்று முதல் என் பெயருக்கு பட்டாவாகி என்னுடைய சுவாதீன அனுபவத்தின் கீழ் இருந்து வரும் சொத்தை விற்பனை செய்வதாக விவரம் உள்ளது. 1ம் பிரதிவாதி பெயரில் கிரையம் பெற்ற சொத்தை அவர் 4ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய உரிமை உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

37. வா.சா.3 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வாதியும், அவரது பெற்றோரும் தனித்தனியாக உள்ளனர் என்று சாட்சியமளித்துள்ளார். வா.சா.4 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், சொத்து வாங்கும்போது வாதி சிறியவர் என்று சாட்சியமளித்துள்ளார். மேற்படி இருவரின் சாட்சியத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, வா.சா.ஆ.1ன் மூலம் 1ம் பிரதிவாதி சொத்தை வாங்கும் போது அந்த சொத்துக்களை வாங்குவதற்கு வாதி தனது வருமானத்தை அளித்தார் என்பதற்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லை என்பது தெரிய வருகிறது. மேலும் வாதி தனது வருமானத்தை கூட்டு குடும்பத்திற்கு அளித்து வந்தார் என்பதற்கு எந்த ஒரு ஆதாரமும் வாதி தரப்பில்

தாக்கல் செய்யப்படவில்லை. எனவே தாவா சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்று வாதி கூறியிருப்பது ஏற்க்கும்படி இல்லை. எனவே வாதிக்கு தாவா சொத்துக்களில் 1/4 பாகம் கிடைக்கக்கூடியது அல்ல என்று இந்த எழுவினா—1ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>38. எழுவினா—2ற்க்கான தீர்வு:—</u>

2. To what other relief, the Plaintiff is entitled for?

இவ்வழக்கில் வாதிக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த எழுவினா—2ற்க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,** வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.04.07 17:47:08 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:—</u>**

| | |
|---|---|
| வா.சா.1 | திரு.நீலகண்டன்,(வாதி), |
| வா.சா.2 | திரு.ஆறுமுகம், |
| வா.சா.3 | திரு.கார்மேகம், |
| வா.சா.4 | திரு.கன்னியப்பன், |

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:—</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 14.05.2003 | தேதியிட்ட கிரைய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | 12.07.2006 | தேதியிட்ட கிரைய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் . |
| வா.சா.ஆ.3 | 02.03.2007 | தேதியிட்ட கிரைய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் . |
| வா.சா.ஆ.4 | 28.11.2007 | தேதியிட்ட கிரைய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல். |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 01.09.2014 | தேதியிட்ட அடமானம் போடப்பட்ட பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.6 | 01.11.2019 | தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல். |
| வா.சா.ஆ.7 | – | 1ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.8 | – | 2ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.9 | – | 3ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.10 | – | 4ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.11 | – | 5ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.12 | – | 6ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை. |
| வா.சா.ஆ.13 | 18.11.2019 | தேதியிட்ட பதில் அறிவிப்பு. |
| வா.சா.ஆ.14 | 18.11.2019 | தேதியிட்ட 4ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு. |
| வா.சா.ஆ.15 | 05.11.2019 | தேதியிட்ட 6ம் பிரதிவாதியின் பதில். |
| வா.சா.ஆ.16 | – | 1ம் அயிட்டச் சொத்திற்கான வழிகாட்டுதல் மதிப்பு மற்றும் சொத்து மதிப்பு பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| வா.சா.ஆ.17 | – | 2ம் அயிட்டச் சொத்திற்கான வழிகாட்டுதல் மதிப்பு மற்றும் சொத்து மதிப்பு பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| வா.சா.ஆ.18 | 10.10.2019 | தேதியிட்ட வில்லங்க சான்று. |
| வா.சா.ஆ.19 | – | ஆதார் அட்டை நகல் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டது). |
| வா.சா.ஆ.20 | – | வம்சாவழி பட்டியல். |
| வா.சா.ஆ.21 | – | வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்திரல் உள்ள வா.சா.2ன் சாட்சி கையெழுத்து . |
| வா.சா.ஆ.22 | – | வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்திரல் உள்ள வா.சா.4ன் சாட்சி கையெழுத்து. |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:–</u>**

பி.வா.சா–1 திரு.பூபதி, (1ம் பிரதிவாதி) ,

பி.வா.சா–2 திருமதி.சாந்தி,

பி.வா.சா–3 திரு. தட்சிணாமூர்த்தி,(5ம் பிரதிவாதி),

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>** இல்லை.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.04.07 17:47:21 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.